# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2263/7 - 2022 ජනවාරි මස 19 වැනි බදාදා - 2022.01.19

2263/7 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபை

### மாகாண சபை அறிவித்தல்கள்

வட மத்திய மாகாண மாகாண சபை

வட மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (ஒத்திசைந்த ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் ஒன்றித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பணிப்புரையாகும்.

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வட மத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
வட மத்திய மாகாணம்,
மாகாண சபை கட்டிடம்,
தர்மபால மாவத்தை,
அநுராதபுரம்,
2022, சனவரி 18.


1A - PG 5716 — 15 (2022/01)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**பணிப்புரை**

*வட மத்திய மாகாணத்துக்குரிய ஹொரவ்பொதான பிரதேச சபைத் தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விஷேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்திய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து சபைக்கு சமர்ப்பித்து, அது நிறைவேற்றாமையினால் மற்றும் 169 ஆம் பிரிதின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2021.12.31 ஆந் திகதியிலிருந்து தலைவராகிய விஜேரத்ன முதியன்சேலாகே சாரிக உதயன்க விஜயரத்ன என்பவர் அப்பதவியிலிருந்து கேட்டு விலகியதாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அத் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த சபையின் தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக கருதப்பட வேண்டும்.*

EOG *01 - 0184/1*

---

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (ஒத்திசைந்த ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் ஒன்றித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் வட மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், பின்வரும் பணிப்புரைகளை அறியத்தருகிறேன்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வட மத்திய மாகாணம்.

*ஆளுநர் அலுவலகம்,
வட மத்திய மாகாணம்,
மாகாண சபை கட்டிடம்,
தர்மபால மாவத்தை,
அநுராதபுரம்,
2022, சனவரி 18.*

**பணிப்புரை**

*வட மத்திய மாகாணத்துக்குரிய, அநுராதபுர மாவட்ட எல்லைக்குட்பட்ட ஹொரவ்பொதான பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விஷேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்திய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகள் பிரகாரம் நிறைவேற்றத் தவறியமையினால் ஹொரவ்பொதான பிரதேச சபையின் தலைவரது பதவி அதன் 169 ஆம் பிரிவின் படி வெற்றிடமாவதால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தேர்தல் (திருத்திய) சட்டப்படி அந்த வெற்றிடத்தை நிரப்பும் வரை தலைவரது பதவி வெற்றிடமாகிய திகதியிலிருந்து அப்பதவியின் தத்துவங்கள், கருமங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செய்தல் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் பிரிவின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு அளிப்பதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

*மேலும், தெரிவாகும் புதிய தலைவரினால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை சபைக்கு சமர்ப்பித்து உரிய முறைப்படி நிறைவேற்றும் வரையான காலப்பகுதிக்கு ஹொரவ்பொதான பிரதேச சபையின் கருமங்கள் தொடர்ந்து கொண்டு நடாத்துவதை உறுதிப்படுத்த ஹொரவ்பொதான பிரதேச சபையின் செயலாளரினால் தயாரித்து அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் ஹொரவ்பொதான பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான மீண்டுவரும் செலவு மற்றும் தற்போது செயற்படுத்தியுள்ள விஷேட கருத்திட்டங்களுக்கான அத்தியாவசியமான செலவுகளைச் செய்திட நான் ஹொரவ்பொதான பிரதேச சபையின் உப தலைவருக்கு இத்தால் பணிப்புரை செய்கிறேன்.*

EOG *01 - 0184/2*

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*வட மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், 1989ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (ஒத்திசைந்த ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் ஒன்றித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் பணிப்புரையாகும்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வட மத்திய மாகாணம்.

ஆளுநர் அவலுவலகம்,
வட மத்திய மாகாணம்,
மாகாண சபை கட்டிடம்,
தர்மபால மாவத்தை,
அநுராதபுரம்,
2022, சனவரி 18.

**பணிப்புரை**

*வட மத்திய மாகாணத்துக்குரிய கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபை தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விஷேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்திய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து சபைக்குச் சமர்ப்பித்து, அது நிறைவேற்றாமையினால் மற்றும் 169 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் 2021.12.31 ஆந் திகதியிலிருந்து தலைவராகிய ஜினபாலகே திலகரத்ன என்பவர் அப்பதவியிலிருந்து கேட்டு விலகியதாக கருத்திற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், அத்திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் குறித்த சபையின் தலைவர் பதவி வெற்றிடமாகியுள்ளதாக கருதப்பட வேண்டும்.*

EOG *01 - 0185/1*

---

**வட மத்திய மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கமுடைய மாகாண சபை (ஒத்திசைந்த ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் ஒன்றித்த 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் எனக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் வட மத்திய மாகாண ஆளுநர் மஹீபால ஹேரத் ஆகிய நான், பின்வரும் பணிப்புரைகளை அறியத்தருகிறேன்.*

**மஹீபால ஹேரத்,**
ஆளுநர்,
வட மத்திய மாகாணம்.

ஆளுநர் அலுவலகம்,
வட மத்திய மாகாணம்,
மாகாண சபை கட்டிடம்,
தர்மபால மாவத்தை,
அநுராதபுரம்,
2022, சனவரி 18.

**பணிப்புரை**

*வட மத்திய மாகாணத்துக்குரிய, அநுராதபுர மாவட்ட எல்லைக்குட்பட்ட கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் 168 மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி மன்ற (விஷேட ஒழுங்குவிதிகள்) சட்டத்தின் 17 ஆம் பிரிவினால் திருத்திய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவின் ஒழுங்கு விதிகள் பிரகாரம் நிறைவேற்றத் தவறியமையினால் கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் தலைவரது பதவி அதன் 169 ஆம் பிரிவின் படி வெற்றிடமாவதால், 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல் (திருத்திய) சட்டப்படி அந்த வெற்றிடத்தை நிரப்பும் வரை தலைவரது பதவி வெற்றிடமாகிய திகதியிலிருந்து அப்பதவியின் தத்துவங்கள், கருமங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் செய்தல் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 8(4) பிரிவி பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு அளிப்பதாக இத்தால் அறியத்தருகிறேன்.*

*மேலும், தெரிவாகும் புதிய தலைவரினால் 2022 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை சபைக்குச் சமர்ப்பித்து உரிய முறைப்படி நிறைவேற்றும் வரையான காலப்பகுதிக்கு கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் கருமங்கள் தொடர்ந்து கொண்டு நடாத்துவதை உறுதிப்படுத்த கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் செயலாளரினால் தயாரித்து அநுராதபுர நிருவாக மாவட்டத்தின் உதவி உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான மீண்டுவரும் செலவு மற்றும் தற்போது செயற்படுத்தியுள்ள விஷேட கருத்திட்டங்களுக்கான அத்தியாவசியமான செலவுகளைச் செய்திட நான், கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபையின் உப தலைவருக்கு இத்தால் பணிப்புரை செய்கிறேன்.*

EOG *01 - 0185/2*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*